18.09.2025

R.L.T.O.P.No.7/2023

வா.சா.1.திரு.கஜானா, த.பெ. சொட்டவாலை செட்டியார் என்ற வீரன் செட்டியார்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. மனுதாரர் எனது அப்பாவின் சகோதரர் மகன் என்றால் சரிதான். பொதுவாக, எங்கள் குடும்பத்திற்குள் ஏதேனும் ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொண்டால் பதிவு செய்வது வழக்கமில்லை என்றால் சரிதான். ஆரம்ப காலத்திலிருந்து எனது அப்பா, நான், எனது அப்பாவின் சகோதரர் கணபதி என்ற கருப்பன் செட்டி ஆகியோர்கள் ஒன்றாக தான் இருந்து வந்தோம் என்றால் ஆமாம். ஆறு, ஏழு ஆண்டுகளாக தனித்தனியாக இருக்கிறோம். தாவா சொத்து மனுதாரர் பெயரில் கிரையம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை நான் கிரையம் பேசி முன் பணமாக ரூ.25,000/– கொடுத்திருந்தேனா என்றால் வாய்க்கரலாக பேசி ரூ.25,000/– முன் பணமாக கொடுத்திருந்தேன். மேற்படி, தொகை சொத்தில் உரிமையாளரான செல்வராஜ் வசம் கொடுத்திருந்தேன் என்றால் ஆமாம். மனு சொத்தை மனுதாரர் கிரையம் பெற்ற தேதியிலேயே அதன் அருகில் உள்ள சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நானும், மனுதாரரும், செல்வராஜ் என்பவரிடமிருந்து தான் கிரையம் வாங்கினோம் என்றால் ஆமாம்.

2. மனுதாரர் கிரையம் வாங்கிய கிரையப் பத்திரத்தின் சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் எல்லாம் உண்மை தான் என்றால் ஆமாம். ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில்

பணப்பற்று விவரத்தில் செல்வராஜ் என்பவருக்கு இருந்த கடன் தொகை ரூ.50,000/–மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது என்றும், அட்வான்சாக ரூ.15,000/– மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது என்றும், மீத கிரையத் தொகை ரூ.10,000/– மனுதாரரால் பத்திரம் எழுதிய தினத்தன்று கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தில் நான் கிரைய ஒப்பந்தத்திற்கு ரூ.25,000/– கொடுத்ததாக காட்டப்படவில்லை என்றால் நான் என் அப்பாவிடம் பணம் கொடுத்து தான் என் அப்பா தான் சொத்துக்களை எங்கள் பெயரில் வாங்கினார்கள்.

3. நிரூபண வாக்குமூலத்தில் நான் முன் பணமாக ரூ.25,000/– கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 8ல் என் குடும்பமும், என்னுடைய சகோதர, சகோதரிகள், பெற்றோர்கள் ஒற்றுமையாக இருந்து வந்ததினால் அப்போதைய சூழ்நிலையில் உறவு, பந்த பாசத்துடன் இருந்து வந்த சூழ்நிலையில் மேற்படி, என் சகோதரர் சண்முகம் சொத்தில் மனுதாரரின் சகோதரர் புகழேந்தி தொழில் செய்து வருவதாகவும், அதேபோல, மனுதாரரின் மேற்படி மனு சொத்தில் நான் தொழில் செய்து வருகிறேன். மேலும், பிற்காலத்தில் ஏதேனும் பிரச்சனை எனில் அவரவர் சொத்திற்கு அவரவர் சென்றுவிட வேண்டும் என்று ஒருமித்து பேசியுள்ளேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்படி நாங்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. மேலும், நிரூபண வாக்குமூலம் பத்தி 8ல் ஏற்கனவே, குடும்ப சூழ்நிலையின்படி ஒப்பந்தப்படி செயல்பட மறுத்து சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டு வருகிறார் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நாங்கள் நெருங்கிய உறவினர்கள்

என்பதால் மேற்படி ஒப்பந்த விவரங்களை எழுத்து மூலம் எழுதிக் கொள்ளவில்லை என்றால் சரிதான்.

4. நெருங்கிய உறவினர்கள் என்ற முறையில் நான் மனுதாரரின் கட்டிடத்தில் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன் என்றாலும் நெருங்கிய உறவினர் என்பதால் எழுத்து மூலமாக எழுதிக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் வாடகைக்கு இல்லை.

5. நான் மனு சொத்தில் ஆரம்ப காலத்தில் ரூ.3,500/—க்கு வாடகைக்கு இருந்து வந்தேன் என்றாலும், வழக்கிற்காக வாடகைக்கு கடை நடத்தி வரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் மனு சொத்தை காலி செய்து மனுதாரர் வசம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் ஆமாம். தற்போதும், நான் மனு சொத்தை காலி செய்து கொடுக்க தயாராக உள்ளேன் என்றால் ஆமாம். ஆனால், என்னுடைய கடையை கொடுத்தால் காலி செய்து கொடுப்பேன். என்னுடைய கடைகள் எதிலும், மனுதாரர் குடியிருக்கவோ, தொழில் செய்யவோ இல்லை என்றால் சரிதான். என்னுடைய தம்பி கடையில் மனுதாரருடைய அண்ணன் வாடகை இல்லாமல் கடையை நடத்தி வருகிறார். எனக்கும் மனுதாரருக்கும் உள்ள பிரச்சனை சம்பந்தமாக மற்ற நபர்களுக்குரிய கடையை ஒப்படைத்தால் தான் நான் கடையை ஒப்படைப்பேன் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் என்னுடைய சொத்து வரும் வரை நான் ஒப்படைக்க முடியாது. எனக்கு சொந்தமான கடைகள் எதிலும், மனுதாரரோ, அவரது சகோதரரோ குடியிருக்கவோ, கடை நடத்தி வரவோ, இல்லை என்றாலும் குடும்ப பிரச்சனையை மனதில் வைத்து காலி செய்து கொடுக்க மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. உறவு முறையின் அடிப்படையில் வாடகை இல்லாமல் கடை நடத்தி வருவதாக

நான் சொல்லியுள்ள சங்கதி உண்மையல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் வாடகையை உயர்த்தி கேட்டும் ஒப்பந்தத்தை பதிவு செய்யக் கேட்டும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் நான் அதற்கு மறுப்பு தெரிவித்து பதிலறிவிப்பு அனுப்பியுள்ளேன். புதிய வாடகை சட்டத்தின்படி, வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்ய முன் வராததால் நான் மனு சொத்தை காலி செய்து கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், மனுதாரருக்கும் வாடகைதாரர், உரிமையாளர் என்ற உறவு முறை தான் உள்ளது என்றாலும், அதை நான் வழக்கிற்காக மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.P. மகாராஜன், எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.